புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# மனுஷ்யபுத்திரன் கவிதைகளில் விளிம்புநிலை மக்கள்

ர.கார்த்திக்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
சாத்தூர் ஸ்ரீராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி
சாத்தூர்.

முனைவர் மூ.கவிதா
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
சாத்தூர் ஸ்ரீராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி,
சாத்தூர்.

ஆய்வுச் சுருக்கம்

இன்றைய சமூகசூழலில் பல்வேறான பிரிவினைவாதம் காணப்படுகின்றன. அவ்வாறான பிரிவினை வாதம் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை மனுஷ்யபுத்திரன் அவர்கள் தன்னுடைய கவிதைகளில் பெரிதும் விளக்கிக் கூறும் விதமாக அமையப் பெற்றுள்ளன. சமூக ஏற்றத்தாழ்வு எவ்வாறு காணப்படுகின்றன என்பதை தன்னுடைய எழுத்து நடையின் மூலம் பன்முகத்தன்மையோடு வெளிப்படுத்தி உணர்த்துகின்றார்.

முக்கியச்சொற்கள் : விளிம்புநிலை, சமூகம், பாலினம், பிரிவினை, கவிதை

## முன்னுரை

விளிம்புநிலை என்ற சொல் இலக்கிய வட்டத்தில் இன்று அதிகம் பேசப்படுகின்ற சொல்லாகக் காணப்படுகிறது. மையம், ஓரம் எனும் இருநிலைகளில் இதனை வகைப்படுத்தலாம். சாதி, சமயம், பொருளாதாரம், தொழில்ரீதியாக முன்னேறியவர்கள் மேல்தட்டு மையம் எனவும் கீழ் உள்ளவர்கள் விளிம்பு எனவும் பொருள் கொள்ளலாம். விளம்புநிலை மக்களாக ஜோசியக்காரி, பைத்தியக்காரர்கள், பூம்பூம் மாட்டுக்காரர்கள், நாடோடிகள், அகதிகள், பழங்குடிகள், பிச்சைக்காரர்கள், திருடர்கள், விபச்சாரிகள், மாற்றுப் பாலினத்தவர்கள், போதை மருந்து உட்கொள்வோர், நிரந்தர நோயாளிகள் போன்றோரைக் கருதுகின்றனர்

## விளிம்பு பற்றி அறிஞர்களின் கருத்து

மையம் மற்றும் விளம்பின் பொதுத்தன்மைகள், வரையறைகள் குறித்து இலக்கியச் சிந்தனையாளர்கள் சில சட்டங்களை தருகின்றனர். அவை "விளிம்பு என்பது ஒரு படித்தானதல்ல, ஒரு ஒற்றைக் கருத்தியல் கொண்டதும் அல்ல, விளிம்பு என்பது ஓர் ஒப்பீடான கருத்தாக்கம். ஒரு மையத்திற்கு விளிம்பாக இருக்கும் ஒன்றானது அதனினும் விளம்புடன் ஒப்பிடும் போது மையமாக செயல்படும் வாய்ப்புண்டு. விளிம்பின் இத்தகைய வேறுபாடு இருப்பினும் மையத்தை எதிர்ப்பது, மையத்திலிருந்து விலகுவது என்கின்ற அடிப்படையில் விளிம்பின் பொதுக்கூறு அமையும்"[1] என்று கூறுகின்றார்.

"சமூக அமைப்பில் மையம்-விளிம்பு என்ற முரண்பட்ட நிலைகள் உள்ளன. மையம் அதிகார அமைப்பு, மேலாதிக்க நிறுவனத்தன்மையுடையது: விளிம்பு ஒடுக்கப்பட்ட நிலையில் இருப்பது"[2] எனவும் பொதுக் கூறுகளும் வரையறைகளும் அமையப்பெறுகின்றன. இதன்மூலம் நாம் அறிவது மையம் ஆதிக்க நிலையிலும் விளிம்பு கீழை நிலையிலும் இருப்பதை அறிய முடிகின்றது.

பின்னை நவீனத்துவக் கூறுகளில் குறிப்பிடத்தக்கது விளிம்புகளின் மீதான கவனம் விளிம்பு நிலை குறித்து பேசும் வெ.கிருஷ்ணமூர்த்தி, ஹெர்பர்ட் மார்க்யூஸின் 'தட்டை மனிதன்

அல்லது ஒற்றைப் பரிணாம மனிதன்' என்ற நூலில் அவர் கூறியுள்ள கருத்துக்களை எடுத்தாளுகின்றனர். அவை,

"விளிம்பு நிலையில் உள்ள மனிதர்கள் சமூகத்தால் உதிரிகள் மற்ற துகள் என்கிற நோக்கிலேயே அணுகப்படுகின்றனர். வர்க்கப் போராட்டம் என்பது பொருளற்றுப் போய்விட்ட நிலையில் விளிம்பு நிலை மனிதர்களுக்கான போராட்டமே இக்கால கட்டத்தில் நிகழ்த்தப்பட வேண்டிய போர். ஓரினப்புணர்ச்சியாளர்கள், வேலையற்றவர்கள், கைதிகள், இருப்பர்கள், பெண்கள், பைத்தியக்காரர்கள், மாணவர்கள் போன்ற பலர் விளிம்புகளில் உள்ளவர்களாக இருக்கின்றனர்"[3] என்கிற விதங்களில் அமைகின்றன. இதனைத் தொடர்ந்து, "இந்தியச் சூழலில் தலித்துகள் மற்றும் உதிரித் தொழிலாளர்களையும் இணைத்துக் கொள்ளலாம்"[4] என்று தம் கருத்தினை நிறைவு செய்கின்றார். விளிம்பு நிலை மக்களின் அடையாளத்தில் "பிச்சைக்காரர்கள், திருடர்கள், விபச்சாரிகள், மாற்றுப் பாலினத்தவர்கள் போதை மருந்து உட்கொள்வோர், நிரந்தர நோயாளிகள்"[5] ஆகியோரையும், "பூம்பூம் மாட்டுக்காரர்கள், நாடோடிகள், அகதிகள் பழங்குடிகள்"[6] போன்றோரையும் எடுத்துரைக்கின்றனர்.

பெண்கள், தலித்துகள், மாற்றுப் பாலினத்தவர்கள், ஓரினப் புணர்ச்சியாளர்கள், அகதிகள் முதலானோர்கள் தங்கள் இருப்பை விளிம்பில் உணர்பவர்களாகவே நடப்புச் சமூகத்தில் காணப்படுகின்றனர். மனிதப் பிறவிகளுக்கே தகுதியற்றவர்களாகவும், உணரும்படியாகவும் நிர்பந்தப்படுத்தப்படுகின்றனர். இவர்களின் பேச்சுக்களும், நடத்தைகளும் ஒரு வித நிலைக்கு தள்ளப்படுகின்றது. இப்படி விளிம்பு நிலை நோக்கி தள்ளப்பட்டவர்களை ஆதரவு கொடுக்கும் விதத்தில் பின்னை நவீனதுவம் குரல் கொடுக்கிறது.

பெண்ணடிமை முறை தொடங்கிய காலம் முதல் பெண் சுதந்திரம் அடைய சீரிய கோட்பாடுகளை கொண்டு வந்துள்ளனர். பெண்ணியச் சிந்தனைகள் உருமாற்றம் பெற்றப் பிறகே பின்னை நவீனத்துவச் சிந்தனையில் தாக்கம் பெரிதாக உருமாற்றம் பெற்றது. "பெண்ணியம் என்பது பின் நவீனத்துவம்"[7] என்ற கோட்பாட்டில் உருவானது என்கிறார் இரா.பிரேமா. "பெண் விடுதலைக்குரலைப் பின் நவீனதுவம் என்றே புரிந்து கொள்ளமுடியும்"[8] என்ற ஞானியின் கருத்தை சான்றாகக் கூறலாம். நாம் இந்த ஆய்வில் கூறுவது பெண்ணடிமை முறையைக் கூறவில்லை. நடப்புச் சமூகத்தில் காணப்படும் விளிம்பு நிலை மக்களை மட்டும் இந்த ஆய்வில் கூறவுள்ளோம்.

### மனுஷ்யபுத்திரன் கவிதைகளில் விளிம்பு நிலை மக்கள்

'ஊழியின் தினங்கள்' என்ற கவிதைப் பகுதியில் கடலின் விளிம்பில் வாழும் குறிசொல்லும் மக்கள், பிச்சைக்காரர்கள், கிளிசோசியக்காரர்கள் போன்றோரின் நிலைகளைத் தம் கவிதையில் வெளிப்படுத்துகின்றார். இவர்களின் வாழ்வாதாரம் மிகவும் கொடுமையாக உள்ளது. இயற்கை சீற்றத்தால் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் விளிம்பு நிலை மக்களாக உள்ளனர். கடற்கரையில் குறி சொல்பவள் வழியை மறித்து நல்ல காலம் உன் முகத்தில் தெரிகிறது கையை நீட்டு என்றாள். ஜோசியம் பார்ப்பவரும் மௌனமாக நடந்தார். உனக்கு நல்ல சேதி வருகிறது என்றாள்;. பிடிவாதமாக பிறகு அவர் நல்ல சேதி வேண்டாம் என்றார். இந்த நகரம் மறுபடியும் நீரால் அழியுமா சொல் என்றார். இதனை ஆசிரியர்,

*"ஜோசியக்காரி திடுக்கிட்டு நின்றாள்*
*உன் வாயால் அப்படி சொல்லாதே*
*என்றாள் கண்ணீருடன்*
*வெள்ளம் வந்த அன்று*
*எல்லாவற்றையும் விட்டுவிட்டு*
*பிச்சைக்காரர்கள் போல ஓடினோம்.*
*மின் கம்பத்தின் உச்சியைத் தாண்டி*
*தண்ணீர் ஓடியது*
*சிறுக சிறுகச் சேர்த்த எதுவும் மிஞ்சவில்லை*
*பதினைந்து நாட்களாக பைத்தியக்காரியாக*
*இந்தக் கடற்கரையில் அலைந்து கொண்டிருக்கின்றேன்"*
*வீட்டில் இருக்க பயமாக இருக்கிறது*
*வீட்டை விட்டுப் போனவர்கள்*

*அந்த தெரு முழுக்க*
*இன்னும் வீடு திரும்பவில்லை'' என்றாள்.*
*கண்ணீரைத் துடைத்துக் கொண்டே*
*''ஜக்கம்மா மனதில் என்ன இருக்கிறதென்று*
*யாருக்குத் தெரியும்'' என்றாள்.*
*''உன் கணவன் என்ன செய்கிறான்?'' என்றேன்*
*''அவர் கிளிஜோசியம் சொல்பவர்*
*வெள்ளத்தில்*
*கிளிக் கூண்டோடு போய்விட்டது''*
*தண்ணீரில் மிதக்கும் கூண்டுக்கிளி*
*என்ற வாக்கியத்தைத்*
*திரும்பத் திரும்பச் சொல்லியபடி*
*பதற்றத்துடன்*
*வேகமாக வீடு நோக்கி நடந்தேன''*[9]

*ஜோசியக்காரி வயிற்றுப் பிழைப்புக்காக ஜோசியம் சொல்லி பிழைத்து வருபவள். பொய்யை உண்மையாகக் கூறி மக்கள் மனதை கவர்ந்து பணம் சம்பாரித்து குடிசையில் வாழ்ந்தாள். அந்த குடிசையையும், தன் கணவனின் கிளிக் கூண்டையும், கிளியையும் தண்ணீர் இழுத்துச் சென்றது என்ற தன் மன கசப்பையும் விளிம்புநிலை மக்களின் பிரச்சனைகளையும் பதிவு செய்துள்ளார்.*

*வெள்ள பாதிப்பால் தான் பைத்தியக்காரியாகச் சென்றதையும் பணத்திற்காக பொய்சொல்லி வாழும் நிலையையும், இயற்கையினால் அடித்தட்டு மக்கள் பாதிக்கப்படும் நிலையையும் ஆசிரியர் தெளிவாகச் சிந்தித்துக் இக்கவிதையில் கூறுகின்றார். வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்பை அதிகம் உணர்ந்தவளாக குறிசொல்பவள் உணர்கின்றாள். பாதிப்பு மனித மனத்தை எவ்வாறு பாதிக்கும் என்ற நிலையை மிகக் கவனத்துடன் கையாண்டுள்ளார் ஆசிரியர் மனுஷ்ய புத்திரன். மேலும் ஆசிரியர் பைத்தியங்கள், நாய்கள் போன்றோர் வெள்ள நகரத்தில் கேட்பாரற்றுப் பிணங்களாக உள்ளன. தண்ணீர் அவர்களைக் குப்பைகளோடு குப்பைகளாக அடித்துச் செல்வதை கண்முன் நிறுத்திக் கூறுகிறார்.*

*''பிச்சைக்காரர்களின் பிணங்கள்*
*கணக்கில் சேர்க்கப்பட்டதா?*
*பைத்தியங்களின் பிணங்கள்*
*பட்டியலில் உள்ளதா?*
*நீரில் மூழ்கி இறந்த*
*தெருநாய்களின் எண்ணிக்கை எவ்வளவு,*
*தண்ணீரில் அவர்கள்*
*குப்பைகளோடு குப்பைகளாக*
*அடித்துச் செல்லப்பட்டிருப்பார்கள்''*[10]

*பிச்சைக்காரர்களை ஏன் ஆசிரியர் தெரு நாய்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றார் என்பதைச் சிந்திக்க வேண்டும். வீட்டு நாய்களை வீட்டின் உரிமையாளர் சீரோடும் சிறப்போடும் கவனித்து பராமரிக்கின்றார். ஆனால் தெருநாய்களை கவனிக்க யாரும் இல்லை. அது எதையும் உண்டு எப்படியும் வாழ்கிறது. இதைப்போலத்தான் பிச்சைக்காரர்களின் நிலையும், எல்லா உயிர்கள் மீதும் அன்பு காட்டும் நிலை கவிஞரின் மனதில் தனித்துவமாக உள்ளது. இப்படிப்பட்ட சமூகத்தில் விளிம்பு நிலை மக்களின் நிலையை மிகக் கவனத்துடன் கையாண்டுள்ளார். ஆசிரியர் எந்த வித அரவணைப்பும் இல்லாமல் வாழ்கின்ற மனிதர்களும் இந்த சமூகத்தில் இருக்கின்றனர் என்பதை மிகத் தெளிவாகக் கூறுகின்றார்;. மேலும் 'ஊழியின் தினங்கள்' என்ற கவிதைகளில் பார்வையற்றோர், நீர் அகதிகள், வாய் பேச முடியாத சிறுவர் சிறுமிகள் போன்றோர் பற்றி இக்கவிதைகளில் குறிப்பிடுகின்றார். மேலும் காந்தியுடன் இரவு விருந்திற்குச் செல்கிறேன் என்ற கவிதைத் தொகுதியில் 'மரக்கால்' என்ற கவிதைப் பகுதியில் ஒரு மரக்கால் வைத்த பிச்சைக்காரனின் நிலையை இந்தக் கவிதை கூறுகின்றது. மணிமேகலை காப்பியம் ஊனமுற்றோரை கடும் சொல்லால் கூறாமல் 'காணார், கேளார், கால்முடப்பட்டோர், கைமுடப்பட்டோர் என்றெல்லாம் கூறுகின்றது. ஆனா இங்கு கவிதையில் கிழட்டுப்*

*பிச்சைக்காரனின் மரக்கால் தூங்காமல் போவோர் வருவோரை எல்லாம் எட்டி உதைக்கிறது. இதனை,*

*"கோயில் வாசலில்*
*தன் மரக்காலைக்*
*கழற்றி வைத்துவிட்டு*
*உட்கார்ந்த நிலையில்*
*தூங்குகிறான்*
*கிழட்டு பிச்சைக்காரன்*
*அந்த மரக்கால் மட்டும்*
*தூங்காமல்*
*போவோர் வருவோரை எல்லாம்*
*எட்டி உதைத்துக் கொண்டிருக்கிறது"*[11]

*தன் கால் இல்லாத நிலையில் மரக்காலால் நடந்த கலைப்போடு இருக்கலாம் பிச்சைக்காரன் தூங்குவதற்கு மரக்கால் மட்டும் தூங்காமல் போவோர் வருவோரை எட்டி உதைப்பதற்கு காரணம் அவனுடைய ஊனம். அந்த ஊனமே மக்களிடம் பிச்சை கேட்பதற்கு வாய்ப்பளிக்கின்றது. இப்படிப்பட் நிலை பிச்சைக்காரனுக்கு ஏற்பட்ட இந்த சமூகமே காரணம் என்பதை இக்கவிதையில் சுட்டிக் காட்டுகின்றார். மேலும் இதே கவிதை தொகுதியில் எனது வெறும் குரல், அது என் ஆயுதம்' என்ற தலைப்பில் பதினாறு ஆண்டுகள் பேசாத அண்டை வீட்டுக்காரன் எல்லை (பொதுப்பாதை) பிரச்சனை காரணமாக கடப்பாறையை எடுத்து எல்லாவற்றை இடித்துத் தள்ளி விடுவேன் என்று கூறியவுடன் அண்டை வீட்டுக்காரன் தூங்காமல் ஒருவரை சண்டைக்கு எதிர்பார்த்து காத்திருக்கின்றான். ஆனால் அவரிடம் எந்த ஆயுதமும் இல்லை வெறும் குரல்தான். இதற்கு ஆசிரியர் ஒரு உவமையைச் சுட்டுகின்றார்.*

*"நகர வாசியை*
*அச்சுறுத்துவது எவ்வளவு எளிதானது*
*கடற்கரையில்*
*பிச்சையெடுக்கும் சிறுவர்களுக்கும்*
*இது தெரியும்"*[12]

*வயிற்றுப் பிழைப்புக்காக பிச்சையெடுக்கும் சிறுவர்கள் சில நேரங்களில் கத்தியை காட்டி எளிதாக மக்களை ஏமாற்றி வயிற்றில் அடித்து பிடுங்குகின்றனர். சில நேரங்களில் மக்களை ஏமாற்றி களவு செய்கின்றனர். இதை;தான் ஆசிரியர் அண்டைவீட்டுக்காரன் சண்டையோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார். மேலும் பண மதிப்பிழப்பு காலத்தில் விபச்சாரம் செய்யும் பாலியல் தொழிலாளிகள் செல்லாத பணங்களை வாங்க மறுக்கின்றனர். கடன் அட்டைகளை ஏற்க மறுத்தனர். இதனை ஆசிரியர்,*

*"பாலியல் தொழிலாளிகள் இந்த இரவில்*
*ஆடை மாற்றிக் கொள்வதற்குள்*
*செல்லாததாகிவிட்ட நோட்டுக்களை*
*வாங்க மறுத்துக் கூச்சலிடுகிறார்கள்*
*அவர்கள்,*
*கடன் அட்டைகளை ஏற்பதில்லை"*[13]

*பணம் இல்லாமல் வாழ்வது கடினம் என்கின்றனர். பணமதிப்பிழப்பால் பாலியல் தொழிலாளிகளும் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். பணம் என்பது அவர்களுக்கு மிகத் தேவையை உண்டாக்குகிறது. மேலும் சிரமத்திற்கு வருந்துகிறேன் என்ற தலைப்பில் மத்திய அரசு மக்களை எவ்வாறு வஞ்சித்தது என்பதையும், பண மதிப்பிழப்பால் 120 கோடி மக்களும் எவ்வாறு இன்னல் பட்டனர் என்பதை மிகத் தெளிவாகக் கூறுகின்றார்.*

*"சிரமத்திற்கு வருந்துகிறேன்*
*பிச்சைக்காரர்களாக வாழ்வது*
*என்றால் என்னவென்று*
*120 கோடி பேருக்கு ஒரே நேரத்தில்*
*உணர்த்தியதற்காக"*[14]

பணத்தை மக்களிடம் வசூலித்துக் கொண்டு மக்களை பிச்சைக்காரர்கள் போல அலையவைக்கும் அரசு ஒரு மக்களை பிச்சைக்காரர்களோடு ஒப்பிடுவதன் காரணம் மக்களை மிகக் கொடுமையாக நடத்துகின்றனர் என்பதை மறைமுகமாக சாடுகின்றது. விளிம்பு நிலை மக்கள் இந்த சமுதாயத்தில் படும் இன்னல்களை ஆசிரியர் மனுஷ்யபுத்திரன் தம்' கவிதைகள் மூலம் தெளிவாகக் கூறுகின்றார்.

முடிவுரை

ஏழைகளுக்கும், முதலாளிகளுக்கும் இடையே ஏற்படும் போராட்டங்களை மிகத் தெளிவாகக் கூறுகின்றார். ஆளும் அரசாங்கத்தின் அதிகார நிலையையும், மக்களின் ஒடுக்கு முறையும் கூறுகிறார் மனுஷ்ய புத்திரன்.

ஏழை மக்களை அரசு எவ்வாறு அடிமைப்படுத்துகிறது. ஏழை மக்களை அரசு வஞ்சிக்கக் கூடிய நிலைமை எடுத்துக் காட்டுகின்றார். மார்க்ஸிய கோட்பாளர்கள் மக்களைப் பற்றிய சிந்தனையாளர்களாக உள்ளனர் என்பதற்கு இந்த தலைப்பு நமக்கு ஒரு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

காலம்தோறும் அரசுக்கும் மக்களுக்கும் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை முன் வைக்கின்றார் ஆசிரியர் மனுஷ்யபுத்திரன் அரசு ஒடுக்கு முறைக் கருவியாக மக்கள் உள்ளனர் என்பதை தம் கவிதைகளில் முன்வைக்கின்றார். இறுதியாக புறக்கணிக்கப்பட்ட பாலியல் தொழில் செய்யக் கூடியவர்கள், கிளி ஜோசியம் சொல்பவர் குறி சொல்பவர், பிச்சைக்காரர்கள், தொழு நோய்கள், மனநிலை பாதிக்கப்பட்டவாக்ள், கலைக் கூத்தாடிகள் போன்றோர் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்ட மக்களாக உள்ளனர். வீடு, வாசல், உண்ண உணவு, உடுக்க உடை என எதுவுமில்லாமல் இறுதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவர்களுடைய நிலையை எண்ணிப்பார்த்தால் மிகவும் வருத்தம் அளிக்கக் கூடிய நிலையில் உள்ளது. காலம் காலமாக இன்னும மக்களை ஏமாற்றக் கூடிய நிலையில்;தான் அரசுகள் காணப்படுகின்றனர். விளிம்பு நிலை மக்களும், ஏழ்மை மற்றும் நடுத்தர மக்களும் இன்றும் மிகவும் கீழை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பது இவ்வியல் மூலம் நமக்கு தெளிவாகிறது.

அடிக்குறிப்பு

1. அ.மார்க்ஸ், விளிம்பு நிலை ஆய்வுகளும் தமிழ்க்கதையாடல்களும் பக்.21
2. தி.சு.நடராஜன், திறனாய்வுக்கலை பக்.162
3. வெ.கிருஷ்ணமூர்த்தி, பின் நவீனத்துவத்தின் அடிப்படைக் கூறுகள் முதலிய கட்டுரைகள் பக். 303
4. மேலது பக். 31
5. அஷ்வகோஷ், பின் நவீனத்துவம் பத்தும் தெளிவும் பக். 167
6. ஆ.பூமிச்செல்வன், பின் நவீனத்துவம் பக். 309
7. இரா.பிரேமா, பெண்ணியம் அணுகுமுறைகள் பக்.100
8. ஞானி, தமிழல் நவீனத்துவம் பின் நவீனத்துவம் பக்.27
9. ஊழியின் தினங்கள் - 47
10. ஊழியின் தினங்கள் - 47
11. மனுஷ்ய புத்திரனின் காந்தியுடன் இரவு விருந்திற்குச் செல்கிறேன். பக்.69
12. மேலது. பக்.88
13. மேலது. பக் 215
14. மேலது. பக் 219

********* ********* ********** ********* ********* ********** ********** **********